அனுப்புநர்

திரு.வெ.ராஜேந்திரன்,
வட்டாட்சியர்,
ஆனைமலை.

பெறுநர்

மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.

ந.க.எண்.1770/2025/ஈ1, நாள்:15.07.2025

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள் : **பணிநியமனம் -கிராம உதவியாளர் - கோயம்புத்தூர் மாவட்டம் - பொள்ளாச்சி கோட்டம் - ஆனைமலை வட்டம் - வட்டாட்சியர் அலுவலகத்தில் காலியாக உள்ள 5 கிராம உதவியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்தல் - வேலை வாய்ப்பகம் மற்றும் பத்திரிகை விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மூலம் நியமனம் செய்தல் - நாளிதழல்களில் விளம்பரம்செய்தல் - தொடர்பாக.**

பார்வை :

1.அரசாணை (நிலை) எண்.625,வருவாய்த்துறை நாள்.06.07.1995.

2.அரசாணை (நிலை) எண்.521,வருவாய்த்துறை நாள்.17.06.1998.

3.அரசாணை (நிலை) எண்.375,வருவாய்த்துறை நாள்.19.10.2015.

4.அரசாணை (நிலை) எண்.574, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைநாள்.17.10.2020

5.அரசாணை நிலை (எண்) 97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள்.11.03.2024.

6.அரசாணை நிலை (எண்) 266, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள்.22.05.2025.

7.அரசாணை நிலை (எண்) 312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள்.04.06.2025.

8.கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.வ.நி..2(2)/02.28/2024 நாள். 09.06.2025.

9.கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.வ.நி..2(2)/02.28/2024 நாள். 13.06.2025.

10.கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.CLRREV/8126/2025/அ5, நாள்.01.07.2025.

*******

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி கோட்டம், ஆனைமலை வட்டத்தில் மார்ச்சநாயக்கன்பாளையம்,தளவாய்பாளையம், காளியாபுரம், அங்கலக்குறிச்சி மற்றும் துறையூர் ஆகிய 05 (ஐந்து) கிராமங்களில் கிராம உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மேற்படி 05 (ஐந்து) பணியிடங்களுக்கு மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலமாக பட்டியல் பெற்றும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் அதன் மூலம் வரும் விண்ணப்பங்களை பெற்று நேர்முக தேர்வு நடத்தி பணி நியமனம் செய்திட பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி நியமனம் செய்வது தொடர்பான வேலை வாய்ப்பு அறிவிக்கையினை 2 நாளிதழ்களில் 17.07.2025 அன்று வெளியிட ஆவண செய்யுமாறும் அதற்கான கட்டணத் தொகை செலுத்தப்படும் என்பதையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

15/7/25

வருவாய் வட்டாட்சியர்,
ஆனைமலை.

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:சார் ஆட்சியர் (மு.கூ.பொ) பொள்ளாச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்டாட்சியர் அலுவலகம், ஆனைமலை வட்டம்,

கோயம்புத்தூர் மாவட்டம்.

அறிவிக்கை எண். 01/2025 நாள்.16.07.2025

கோயம்புத்தூர் மாவட்டவருவாய் அலகில், ஆனைமலை வட்டத்தில் காலியாக உள்ள 05 கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். | 17.07.2025 முதல் | |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள். | 18.08.2025 மாலை 5.45 மணிவரை | |
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர். | |
| ஊதிய விகிதம்: | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/- | |
| வட்டத்தின் பெயர்: | ஆனைமலை | |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 05 | |
| நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம். | வ.எண் | கிராமம் |
| | 1. | 02. மார்ச்சநாயக்கன்பாளையம் (குரூப்) காளியப்பகவுண்டன்புதூர் |
| | 2. | 11. தளவாய்பாளையம் |
| | 3. | 26 காளியாபுரம் (வடக்கு) |
| | 4. | 28. அங்கலக்குறிச்சி |
| | 5. | 29. துறையூர் |

| இனசுழற்சி விபரம் | வ. எண். | சுழற்சி எண் | இன சுழற்சி | பொது/ பெண் | முன்னுரிமை |
|---|---|---|---|---|---|
| | 1. | 4 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்கள் தவிர)<br>Backward Class (Other than Backward Class Muslims) | பொது<br>General | முன்னுரிமை<br>Priority<br>அரசு பள்ளியில் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்<br>Studied at Govt. Schools in Tamil Medium) |
| | 2. | 5 | பொதுப்பிரிவினர் (பொது)<br>General Turn | பெண்கள்<br>Women | முன்னுரிமையற்றவர்<br>Non Priority<br>(ஆதரவற்ற விதவை)<br>(Destitute Widow) |
| | 3. | 6 | அட்டவணை வகுப்பினர்<br>Scheduled Caste | பொது<br>General | முன்னுரிமை<br>Priority<br>(முன்னாள் இராணுவத்தினர் - (மாற்றுத்திறனாளி)<br>(Disabled Ex - Servicemen) |
| | 4. | 7 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர்<br>Most Backward Classes and Denotified Communities | பெண்கள்<br>Women | முன்னுரிமையற்றவர்<br>Non Priority<br>(ஆதரவற்ற விதவை)<br>(Destitute Widow) |
| | 5. | 8 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்கள் தவிர)<br>Backward Class (Other than Backward Class Muslims ) | பெண்கள்<br>Women | முன்னுரிமையற்றவர்<br>Non Priority<br>(ஆதரவற்ற விதவை)<br>(Destitute Widow) |
| கல்வித் தகுதி | 1. 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு 10ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>2 10- ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) வைத்திருக்க வேண்டும்.<br>3 மேலும், தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | | | | |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர் ஆனைமலை வட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன்படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். | | | | |
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது | 21 வயது (அனைத்துப் பிரிவினருக்கும்) (01.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.) | | | |
| | அதிகபட்சவயது | 32 வயது (பொதுபிரிவினர்)<br>37வயது- பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்) / பழங்குடியினர். | | | |

| | | |
|---|---|---|
| | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும். |
| | முன்னாள் இராணுவத்தினருக்கு | 50 வயது - பொதுபிரிவினர்<br>55 வயது - பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்.<br><br>(அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021-இன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை கோயம்புத்தூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://coimbatore.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் ஆனைமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். காலம் கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது | |
| குறிப்பு | 1. கூடுதல் விபரங்களுக்கு https://coimbatore.nic.in இணையதளத்தில் பார்க்கவும்<br>2. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/ வாசித்தல் / எழுதுதல், திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும். | |

வட்டாட்சியர் அலுவலக முகவரி

வருவாய் வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆனைமலை வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 642 104.

15/4/25
வருவாய் வட்டாட்சியர்,
ஆனைமலை.

15/7/25